<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 55/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.1 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : U.V ஜெய்பிரகாஷ் | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | |
| கிராமம் | : | இனம் | |
| தாலூக்கா | : | வயது | |
| Mail ID | : | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 28.07.2025.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது அமராவதி நகர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.02.2025 ம் தேதி நானும் தலைமை காவலர் கொங்குராஜ் ஆகியோர் சிறப்பு உதவி ஆய்வாளர் பொருட்செல்வன் என்பவருடன் டாஸ்மார்க் கடைகளில் ரோந்து பணிக்கு சென்றோம்.குருவப்பநாயக்கனூர், தும்பலப்பட்டி, குளத்து புதூர், மானுபட்டி, 9/6 செக்போஸ்ட் ஆகிய இடங்களில் டாஸ்மார்க் கடை அருகில் கையில் பையை மறைத்து வைத்துக் கொண்ட சந்தேகப்படும்படியாக நின்று கொண்டிருந்த ஒரு நபரை பிடித்து விசாரித்த போது அவர் பெயர் அப்துல்லா த/பெ.இப்ராகிம் என்றும் அவர் கையில் 7 காப்பர் பிராந்தி பாட்டில்கள் 5 one man army rum ம், 5 OAK Votka Rum ம், மொத்தம் 17 மது பாட்டில்களை அவர் வைத்திருந்தார். அதை விற்பனை செய்வதற்கு வைத்திருந்ததாக அவரே ஒப்பு கொண்டார். சிறப்பு உதவி ஆய்வாளர் மேற்படி பிராந்தி பாட்டில்களை கைப்பற்றி கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். பொது ஜன சாட்சிகள் முன் வராததால் நானும் கொங்குராஜ்

என்பவரும் கையொப்பம் செய்தோம்.

2. பின்னர் வழக்கு சொத்துகளை சிறப்பு உதவி ஆய்வாளர் அழித்தல் மகசர் தயார் செய்து எங்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றார். என்னிடம் காட்டடப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். கைப்பற்றுதல் மகசர் அசா.ஆ.1 என குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டடப்படும் அழித்தல் மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். அழித்தல் மகசர் அசா.ஆ.2 என குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரியின் மீது குற்ற எண் 15/2025 ச/பி. 4(1)(c) TNP ன் படி சிறப்பு உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை தயார் செய்தார். அதற்கு நாங்கள் உதவியாக இருந்தோம். பின்னர் எதிரியை கைது செய்து நிலைய ஜாமினில் விடுவித்தார். சிறப்பு உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. _ ரோந்து போனதாக எத்தனை மணிக்கு சென்று எத்தனை மணிக்கு காவல்நிலையம் திரும்பினி்ரிகள் என்றால் காலை 08.00 மணிக்கு சென்று 10.00 மணிக்கு வந்தோம். மது பாட்டில்கள் அனைத்து தமிழ்நாடு அரசு மதுபானக்கடையில் விற்பனை செய்யும் மது பாட்டில்கள் என்றால் சரிதான். 9/6 செக்போஷ்ட் மற்றும் மதுபானக்கடை முன்பு சிசிடிவி கேமரா உள்ளது என்றால் மது பானக்கடையில் பொருத்தப்பட்டுள்ளது. எதிரி பார்த்தாக சொல்லப்படுடம இடத்தில் எதிரி மட்டும் தான் நின்றிருந்ததாக வழக்கு கோப்பில் உள்ளது என்றால் சரிதான். எதிரி எந்த ஒரு நபருக்கும் விற்பனை செய்வதை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். அந்த இடம் பொது மக்கள் நிறைந்த இடம் என்றால் சரிதான்.
2. பொது ஜன சாட்சிகளை எத்தனை பேரை அழைத்தார்கள் என்றாலும் ஏன் அவர்கள் முன் வரவில்லை என்று உதவி ஆய்வாளர் விசாரித்தாரா என்றாலும் அவருக்கு தான் ஏன் முன்வர வில்லை என்று தெரியும். உங்கள் முன்னிலையில் பார்வை மகசர் வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் ஆமாம். கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் இடத்தில் நீங்கள் மற்றும் உங்களுடன் வந்தவர்கள் அனைவரும் அதுவரை வேறு இடத்திற்கு செல்லவில்லை என்றால் ஆமாம்.
3. கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழித்தல் மகசர் எங்கு வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சம்பவ இடத்தில். பிரிண்டர் மற்றும் லேப்டாப் எடுத்து சென்றாரா என்றால் இல்லை. கைப்பற்றப்பட்டதாக

சொல்லப்படும் மது பாட்டில்களின் கொள்ளளவு மொத்தம் 3 லிட்டர் என்றால் சரிதான்.

4. கைப்பற்றுதல் மகசர் எங்கு வைத்து பிரிண்ட் எடுக்கப்பட்டது என்றால் கையெழுத்து மட்டும் தான் போட்டேன், எங்கு வைத்து பிரிண்ட் எடுக்கப்பட்டது என்று தெரியாது. அழித்தல் மகசர் சிறப்பு உதவி ஆய்வாளர் Prohibition அதிகாரி மற்றும் காவல் ஆய்வாளர் முன்னிலையில் அழிக்கப்பட்டதாக சங்கதிகள் காணப்படவில்லை என்றால் சரிதான். அழித்தல் மகசர் தயாரிக்க காவல் சிறப்பு உதவி ஆய்வாளருக்கு தகுந்த உரிமை இல்லை என்றால் அது பற்றி தெரியாது.
5. உண்மையில் ரோந்து சென்று கைப்பற்றியிருந்தால் அங்கிருந்த அரசு அதிகாரிகளை சாட்சியாக போட்டிருப்பிர்கள் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் காலை 10.00 மணிக்கு வழககு சொத்துடன் எதிரியை அழைத்து வந்ததாக காவல் சிறப்பு ஆய்வாளர் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.
6. அழித்தல் மகசர் தயார் செய்யப்பட்ட நிலையில் புகைப்படம் அல்லது வீடியோ எடுக்கப்பட்டதா என்றால் எடுக்கவில்லை. தமிழக அரசு அனுமதியின் படி 4.5 லிட்டர் மது பாட்டில்கள் வைத்து கொள்ளலாம் என்றாலும் ரோந்து போனதாக சொல்வது பொய் என்றாலும் எதிரி மீது புள்ளி விவர கணக்கிற்காக பொய்யாக வழக்கு போட்டுள்ளிர்கள் என்றாலும் சரியல்ல.
7. உண்மையில் ரோந்து சென்றிருந்தால் மது பாட்டில்களை கைப்பற்றி நீதிமனறத்தில் ஆஜர படுத்தியிருப்பிர்கள் என்றாலும் அது போல் நடக்காததால் பொய்யாக அழித்ல் மகசர் தயார் செய்ததாக சொல்லியுள்ளிர்கள் என்றாலும் சரியல்ல.எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.